
# மாற்றம்

பயணம் : 01 ஆடி - புரட்டாதி 1993 பாதை : 04




தமிழ்த்தாய் மன்ற வெளியீடு ரூபா : 10/-

சத்துணவுக்கு

# ஜீவாகாரம்

## முழுக் குடும்ப உப உணவு

4 மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், உடல் நலம் குன்றியோர், வயோதிபர் மற்றும் ஏனையோர்க்கும் உகந்த முறையில் தயாரிக்கப்பட்டது.



# Jeevakaram

## ALL FAMILY PRECOOKED SUPPLEMENTARY FOOD

GNANAM ARTS & ADVS

Prepared under guidance of Primary Health Centre, Research Unit, General Hospital (Teaching) Jaffna.

by ANNA INDUSTRY INUVIL.

# மாற்றம்

மக்கள் சஞ்சிகை

பயணம் : 01 பாதை : 04

ஆசிரியர் :
யாதுமூரான்

இணை ஆசிரியர் :
மல்லிகை மைந்தன்

நிர்வாக அமைப்பு :
பே. ராஜவர்மன்

வெளியீடு :
தமிழ்த்தாய் மன்றம்

தொடர்பு :
மாற்றம் பணிமனை
புதிய செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

ஆடி - புரட்டாதி, 1993


## உறுதி பூணுவோம்

நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட நாங்கள் எங்கள் வாழ்வு ரீதியாகவும்; அவ்வப்போது மொழி ரீதியாகவும் பல அகப்புறத் தாக்கங்களுக்கு உட்பட்டு வந்துள்ளோம்.

மக்களாகிய எங்களின் நடைமுறைச்செயற்பாடுகள் அரசியல் தலைவர்களிடையே காலத்துக்குக்காலம் ஏற்பட்ட அடிப்படை முரண்பாடுகள், ஆட்சிவெறி கொண்ட உயர் குழாமினரின் செயற்பாடுகள், ஈர நெஞ்சு கொண்ட ஒவ்வொரு தமிழனையும் விழித்தெழச்செய்துள்ளது.

‘நாம் தட்டக் தட்டக் குனிபவர்’ அல்லர் என்பதை பசுமரத்தேறிய ஆணியாகப் பொறிக்கப்படும் வரலாற்று மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் நாங்கள் ‘இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொன்மையுள்ள எங்கள் செம்மை மொழியாகிய தமிழ் மொழியைக் காக்கவும் பேணி வளர்க்கவும் கடும் பணியாற்றுவோம்’ என உறுதிபூண்டு கொள்ளுவோம்.

- ஆசிரியர்

அட்டைப்பட ஓவியர்:
மாற்கு

ஒற்றுரு :
ஆனந்தன்

ஆசிரியர் குழு :
சமுத்திரபந்தன்
உரும்பையூர் முரளி
நிலாமகன்

மன்ற ஆலோசகர் :
கலாநிதி க. கனகராசா

விநியோகம் :
ச. சுமணன்
கோ. அமலதாஸ்
எஸ். திமோதி இளங்கோ
எஸ். தூயவன்
செ. ராஜ்குமார்
சி. ஞானவதனி

அச்சமைப்பு :
முல்லை அச்சகம்
ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பதிப்பாளர் :
பொற்கமலதேவி
பதிப்பகம்

பக்கங்கள் : 34

அடுத்த இதழ் :
1993 ஐப்பசி

தனிப்பிரதி :
ரூபா : 10/-

ஆண்டுச் சந்தா :
ரூபா : 40/-
(நான்கு இதழ்கள்)

# உள்ளே ......


- ☐ முரண்பாடுகள்
- ☐ சுவையான புதினங்கள்
- ☐ அரசறிவியல் பார்வையில் உயர்குழாம்
- ☐ அவமானம்
- ☐ பொதுஅறிவுப் போட்டி
- ☐ விவாத மேடை
- ☐ பிடிப்பு (கவிதை)
- ☐ ஈரம் (சிறுகதை)
- ☐ ஊருக்கொரு சுந்தரி
- ☐ வேட்டை
- ☐ அறிந்துகொள்ளுங்கள்
- ☐ ஏமாற்றம்
- ☐ நல்லூரில் நாங்கள்
- ☐ வேலணையூர் சுரேஷ்
- ☐ தமிழன் கல்வி (கவிதை)
- ☐ சுருட்டியின் பதில்கள்
- ☐ தேசாபிமானி யார்?
- ☐ கம்பன் கழகம்
- ☐ குறுக்கெழுத்துப் போட்டி


**வாசகர்களே !**

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகை பற்றிய உங்களுடைய கருத்துக்களையும் ஆக்கங்களையும் புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். கருத்துக்கள் கட்டுரையாளர்களது, எழுத்துக்கள் எழுத்தாளர்களது.

# முரண்பாடுகள்

○ அக்கரைச்சக்தி

ஒருவரது அல்லது ஒரு குழுவினது சிந்தனையோ, செயலோ மற்றவரது அல்லது மற்றைய குழுவினது சிந்தனை. செயல்களிலிருந்து மாறுபட்டதாக அமையும் போது, இருதரப்பினர்க்கிடையேயும் முரண்பாடுகள் தோன்றுகின்றன என நாம் கூறுகிறோம். சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் அனுகூலமான விளைவுகளை ஏற்படுத்தி சமூகத்தில் மாபெரும் மாற்றங்களை உண்டாக்கி விடுகின்றன. வேறு சந்தர்ப்பங்களில் அவை பிரதிகூலமாக அமைந்து சமூகத்தில் பிரச்சனைகளையும், நெருக்கடிகளையும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. நல்லதோ, தீயதோ ஏதோ ஒரு மாற்றம் ஏற்படுவதுதான் முரண்பாடுகளின் வேலையாகும். மனித சிந்தனை எவ்வளவுக் கெவ்வளவு பக்குவமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கு தீமையான மாற்றங்களைக் குறைத்து நல்ல மாற்றங்களை - சமூக முன்னேற்றத்திற்கு ஏற்ற மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

இயற்கையில் ஒன்றிக்கொன்று எதிரான அல்லது முரண்பட்ட சக்திகளும், அவற்றின் செயல்களும் இருப்பதை நிகழ்வதை அவதானிக்கலாம். அவ்வாறில்லாவிட்டால் இயற்கை சமநிலையை பேண முடியாது. ஓரிடத்தில் சூடு இருந்தால் மற்றோரிடத்தில் குளிர் உள்ளது. உயரமான மலைகள் உள்ள அதே நேரம் ஆழமான கடல்கள் உள்ளன. ஒளி இருந்தால் இருளும் உண்டு. அணுக்களில் நேரேற்றமுள்ள புரோத்தனைச் சுற்றி எதிரேற்றமுள்ள இலத்திரன் உள்ளது. புரோத்தன்களின் எண்ணிக்கையையும், இலத்திரன்களின் எண்ணிக்கையையும் சம அளவில் இருந்தாற்றான் அணு நடுநிலையில் இருக்கும். அவ்வாறில்லாவிட்டால் புரோத்தன் - இலத்திரன் எண்ணிக்கைகள் சமமாகும்வரை அணு தாக்கங்களில் ஈடுபடும். கதிர்த்தொழிற்பாட்டின் போது நேரேற்றமுள்ள துணிக்கைகள் செல்லும் திசைக்கு எதிரான திசையில் எதிரேற்றத் துணிக்கைகள் செல்கின்றன எனக்கூறுகிறது அணுவிஞ்ஞானம். அணுவில் காணப்படும் இம் முரண்பாடான துணிக்கைகள் பற்றிய ஆராச்சியின் நல்ல மாற்றம் ஏற்படுத்தியதன் விளைவுகளே அணு சக்தியை மின்சாரம், வெப்பம் உண்டாகப் பயன்படுவதாகும். தீய விளைவுகள் அணுக்குண்டுகள் செய்த பேரழிவுகளாகும். முழுப்பிரபஞ்சத்தையே எடுத்து நோக்கினால் பெரிய நட்சத்திரங்கள் சிறிய நட்சத்திரங்களைக் கவர்ந்து சுற்றிவரச் செய்கின்றன. சிறிய நட்சத்திரங்களைச் சுற்றிக் கோள்களும் கோள்களைச் சுற்றி உப கோள்களும், எரிகற்களும் வலம் வருகின்றன. ஒன்று கவரும் பொருளாகவும் மற்றையது கவரப்படும் பொருளாகவும் முரண்பட்டு இருப்பதாற்றான் இயற்கை

இவ்வாறு சமநிலையைப் பேணிச் செயற்பட்டுவருகிறது. எனவே முரண்பாடு இயற்கையில் அவசியமான ஒன்றாகும் என்பது கண்கூடு.

மனிதனோ இயற்கையின் அற்புதப் படைப்பு. அவன் பூமி என்கின்ற கோள் ஒன்றைத் தன் ஆட்சியில் வைத்திருக்கின்றான். மனிதன் ஆண், பெண் என்று இரு உருவங்களாகத் தோற்றம் அளிப்பதே ஒரு முரண்பாடாகும். உடலமைப்பில் அவ்வாறு முரண்பாடு இல்லாவிட்டால் அவன் இனம் பெருக்கமுடியாது. இனம் பெருக்க வேண்டும் என்பதையே முதற்காரணமாகக்கொண்டு குடும்பம் என்னும் அமைப்புத் தோன்றியது. கணவன் மனைவி என்னும் உறவு தோன்றியது. இருவர் கருத்தொருமித்துக் காதல் வயப்பட்டு முரண்பட்ட அமைப்புடைய உடல்களால் இணைந்து அவர்களைப் போலவே ஆனால் முரண்பட்ட அமைப்புடைய ஆண் பெண் இனங்களைப் பெறுகிறார்கள். இங்கு உடல் தோற்ற முரண்பாடு மனித இனத்தின் ஆக்கத்திற்கே உதவுகிறது. ஆனால் இருவாது வாழ்விலும் சிந்தனைகள் முரண்பட்டாலோ விளைவு விபரீதமாகவே இருக்கும். சிந்தனைகள் செயல்களாகப் பரிணமிக்க அவைகள் சச்சரவுகளாகவும், பிணக்குகளாகவும், வழக்குகளாகவும் உருவெடுத்து; குடும்பப் பரிவுக்கும் பிள்ளைகளின் நிற்கதியான நிலைக்கும் இட்டுச் செல்லும். சிந்தனை முரண்பாடு குடும்பத்தை மட்டுமல்ல நண்பர்களைப் பிரிக்கும், உறவினரைப் பகைக்கும், உற்றாரை வெறுக்கும், பெற்றோரையே புறக்கணிக்கும் ஈற்றில் சமூகமே நடுநிலை தவறிக் கெட்டழியும்.

சமூக அமைப்பில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் முதலாளி, தொழிலாளி வர்க்கங்கள் உருவாகின்றன. சமூக வாழ்வின் சகல பரிணாமங்களையும் பொருளாதாரமே பிரதான காரணியாக நின்று ஆளுவதால் அதில் உயர்ச்சிகண்ட முதலாளி வர்க்கத்தினர், பொருளாதாரத்தாழ்வு உள்ள தொழிலாளிகளைச் சகல விதத்திலும் அடக்கி வாழவே முற்படுவர். இந்தநிலை சகல மட்டங்களிலும் தென்படுவதை அவதானிக்கலாம். இதன் விஸ்வரூப வடிவமே அனைவரும் அறிந்த ரஷ்யப்புரட்சியாகும். ஜார் மன்னனின் முதலாளித்துவ அடக்குமுறையை உடைக்கும் முரண்பட்ட சிந்தனையாகவே மார்க்ஸீய சித்தாந்தம் உருவாகி லெனினினால் அது செயற்படுத்தபட்டது. சீனாவிலும் மாசேதுங் இவ்வாறான ஒரு சிந்தனையை கம்யூனிசம் என்ற பெயரில் செயற்படுத்தி மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார். பெரும்பாலான மக்கள் சமூகம் உலகமே வியக்கும் வண்ணம் இச்சிந்தனைகளை ஏற்றுக்கொண்டு புதிய பாதையில் நடந்து காட்டியது. ஆகவே முதலாளிகளுக்கு எதிரான சிந்தனை முரண்பாடு இங்கு மக்கள் புரட்சியை ஏற்படுத்தி சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளது என்பதை நாம் நோக்கலாம்.

பல நாடுகளில் நாம் காணும் இன்னுமொரு வடிவம் இன முரண்பாடாகும். வெவ்வேறு இனங்கள் கலந்து வாழும் நாடுகளில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தைச் சகல வழிகளிலும் அடக்க முற்படுவதே இந்த இன முரண்பாட்டின் செயல்வடிவமாகும். இவ்வாறு அடக்கு முறைக்கு உட்பட்டுப் பரிதவிக்கும் மக்கள் இனம் அதை உடைத்தெறிய முற்படும்போது போராட்டம் ஒன்று உருவாகிறது. அது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அறப் போராட்டமாகவோ அன்றி ஆயுதப் போராட்டமாகவோ அமையலாம். இரண்டும் கலந்த ஒன்றாகவும் இருக்கலாம். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ஆயுதப் போராட்டம் நடத்த மகாத்மாகாந்தி அறப் போராட்டம் நடத்தி வெள்ளையர்களின் அடக்கு முறைக்குச் சாவு மணியடித்தார். இலங்கையிலும் சிங்களப் பேரினவாதம் தமிழினத்தை அழித்தொழிக்கச் சகலவிதத்திலும் முற்பட்டு வருவதை உணர்ந்தே அறப் போராட்டம் முதலில் முன்னெடுக்கப்பட்டது. அறவழிகளை மதிக்காத சிங்களப் பேரினவாதத்திற்குச் சவால் விடுக்கும் வகையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இலங்கைத் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் ஆயுதப் போராட்டம் புதுமையான அம்சங்களை உடையது. தமிழ்ப் போராளிகள் பல கனரக ஆயுதங்களின் தாக்குதலுக்கு மத்தியில் நின்று எதிரியோடு போராடும் மனநிலை பெற்றிருப்பதோடு தேவையானால் எதிரியை அழிப்பதற்காக தன் இன்னுயிரையே தற்கொடையாக வழங்கும் மனத்திண்மையுடையவராக உள்ளார்கள். ஆண், பெண் என்ற வேறுபாடின்றி ஆணுக்குப் பெண் சளைத்தவளல்ல எனும்படிக்கு தமிழ்ப்பெண் போராளிகளும் மாபெரும் சாதனை படைத்து வருகின்றனர். அதே நேரம் தமிழரின் உரிமைக் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் போன்ற அறப் போராட்டத்தையும் கைக்கொண்டு தம் ஆன்மீக பலத்தையும் வெளிப்படுத்தி உலகமே வியக்கும் வண்ணம் தற்கொடையாளர் ஆகின்றனர். தமிழ் மக்களின் இப்புரட்சிகரமான புதிய வடிவமான போராட்ட முறை இலங்கையில் தோன்றிய இன முரண்பாட்டின் ஒரு விளைவேயாகும்.

---

## பண்பாடு தரும் ....

நிச்சயதார்த்தம் போன்ற சுபகாரியங்களுக்கு வெற்றிலை பாக்கு பரிமாறுவார்சள். வெற்றிலை 'இதயத்தை'ப் போன்ற உருவமைப்புடையதால் இருவரும் வெற்றிலை பரிமாறிக்கொள்வது இதயத்தைப் பரிமாறிக்கொள்வது போன்றமையும். பாக்கின் மேல்பகுதி வெள்ளையாகவும் கீழ்பகுதி மண்ணிறமாகவும் உள்ளது. இவற்றை எப்படித்தான் சுரண்டினாலும் அதன் நிறம் மறையாது. அதேபோல மனிதர்களும் வேற்றுமையில் ஒன்றுமைகள் காணுபவராக உறவை வளர்த்துக்கொள்பவர்களாக இருக்க வேண்டும். என பாக்கு அர்த்தம் கூறுகிறது.

— நிலாமகன

## இப்படியும் கருமிகளா ?

ஒரு பிரஞ்சுக் கோடீஸ்வரர் பங்கு சந்தையில் முதலிட்டு ஏக நஷ்டமடைந்தார். இருந்தும் அவரிடம் 15 லட்சம் பவுண்டு பணம் இருந்தது. ஆனால் தோல்வியின் வேதனையை பொறுக்க முடியாமல் தற்

# சுவையான புதினங்கள்

கொலைசெய்யத் தீர்மானித்துவிட்டார். அதற்காக கயிறு வாங்க கடைக்குப்போன ஆசாமிக்கு கயிற்றின் விலையைப் பற்றித் தகராறு. நீண்ட நேரம் வாதாடி சில சதங்கள் மலித்து, வென்றுவிட்ட திருப்தியில் கயிற்றை வாங்கிக்கொண்டு போய் தூக்கில் தொங்கினாராம்!

## விநோத பழக்கங்கள்

இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸுக்கு ஒரு விநோதப் பழக்கம். அவரின் கன்னச் சதைகள் கண்டி இழுத்துக்கொள்ளும் அது எதிரில் இருப்பவர்களைப் பார்த்துக் கண்ணடிப்பதுபோல இருக்கும். பிரமச்சரிய நாட்களில் எவ்வளவோ பெண்கள் இளவரசர் தங்களைப் பார்த்துக் கண்ணடிக்கிறார். என்றெண்ணி அவரிடம் சிக்கியது உண்டு.

## மாரடித்தல்

அதிக அதிர்ச்சியான செய்தி இருதயத்தை தாக்குவதால் இருதயம் நின்று விடுகிறது. இதற்கு காரணம் இரத்த ஓட்டம் தடைப்படுதலே ஆகும். மீண்டும் இருதயத்தை இயக்க 'மசாஜ்' செய்கிறார்கள்.

எனவேதான் மரண வீடுகளில் இருதயம் அதிர்ச்சியில் நிற்காமல் இருக்க மார்பினை அடித்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## இருமுறை

அமாவசை, பூரணை நாட்கள் மாதத்தில் ஒருமுறைதான் வரும் ஆனால் சிலவேளைகளில் அமாவாசை அல்லது பூரணை மாதத்தில் இருமுறை வருவதுண்டு. இதேபோல் இவ்வாண்டும் ஆவணி மாதத்தில் இரு அமாவாசைகள் வருகின்றது.

ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளாக வெவ்வேறு அர்த்தங்களில் பேசப்பட்டு வந்த உயர் குழாம் என்ற பதம் இன்று உலக அரசியலின் ஆட்சிப்பீடத்துத் தலைமைகளின் செல்வாக்கை மட்டிடுகின்ற ஒரு அளவுகோலாகத் திகழ்கின்றது. இவ்வுயர்குழாம் கோட்பாடு (Theories of Elites) நடைமுறையில் இருந்து வந்த ஜனநாயக சோஷலிசக் கருத்துக்களை எதிர்ப்பனவாகவும் இதற்கு மாற்றீடான கருத்துக்களை வெளிப்படுத்துவனவாகவும் காணப்பட்டது. பழமைவாத தீவிரவாதக் (Radicalism) கருத்துக்களை உள்ளடக்கிய இவ் உயர் குழாம் கோட்பாடானது சமாதான வாதம் (Pacibism) மனிதாபிமான வாதம் (Humanitaranism) போன்றவற்றையும் நிராகரிக்கின்றது.

அரசியலதிகாரம் என்பது சமூகத்தில் வாழும் ஒருசிலரின் கைகளிலேயே குவிந்துள்ளதாகக் கூறும் உயர்குழாம் கோட்பாடானது எப்படி? எவ்வாறு? என்பவற்றில் பல முரண்பாடான கருத்துக்களைக் கொண்டுள்ளது.

# அரசறிவியல் பார்வையில்

# உயர்குழாம் கோட்பாடு

இக் கோட்பாடுபற்றிய கருத்துக்களை வெளியிட்டவர்களாக Pereto, Mosca, Michets, Gasset, C. W. Mills Maxweber, Dijilas Veblen Burnhan போன்றவர்களை இனம் காணலாம். இவர்கள் தமது காலச் சூழலின் தாக்கம், தன்மை, வேறுபாடு என்பவற்றிற்கேற்ப தமது கருத்துக்களை முன்வைத்தனர் என்பதால் இவர்களின் கருத்துக்களிடையே முரண்பாடுகள் சாதாரணமாகக் காணப்படுவது என்பது இயற்கையே.

உயர்குழாம் கோட்பாட்டாளர்களில் ஒருவராகிய Pereto 'The Mind and Society' என்ற தனது நூலில் உயர்குழாம் பற்றிய ஆய்வை வெளிப்படுத்திய போது நாம் அவர் சமுதாயத்தை இரு பிரிவுகளாகவும் அப்பிரிவுகளில் ஒன்றான உயர்குழாத்தை இரு பிரிவுகளாகவும் சுட்டிக்காட்டுவதை அவதானிக்கலாம். மேல் நிலையில் உள்ளவர்களை உயர்வர்க்கமென்றும், கீழ் நிலையில் உள்ளவர்களை வெகுஜனங்கள் என்றும் கூறுகின்ற Pereto அதேவேளை மேல் நிலையிலுள்ள உயர்வாக்கத்திலும் இரு பிரிவு உண்டென்றும் அதுவே ஆளும் உயர் குழாம் (Governing Elite) என்றும், ஆட்சியில்லாத உயர்குழாம் (Non Governing Elite) என்றும் விளக்குகின்றார். Pereto ஆளும் உயர் குழாமாக மந்திரிசபை, பாராளுமன்றம் போன்றவற்றின் அங்கத்தவர்கள், கட்சியின் முக்கிய புள்ளிகள், அரசாங்க சேவை, இராணுவ சேவை, என்பவற்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், கைத்தொழில் அதிபர்கள், அரசாங்க நிறுவனங்களின் முகாமையாளர்களைக் குறிப்பிடுகின்றார்.

யோ. ஜெயகாந்தன் B. A. (Hons)
அரசியல் சிறப்பு

பேராசியர் வி. நித்தியானந்தன் அவர்கள் இலங்கையின் வர்க்க அமைப்பு முறை பற்றிக் உறுகின்ற போது 19-ம் நூற்றாண்டின் நடுப் பகுதி முதலே சமூக மாற்றங்களும் படிப்படியாக ஏற்படத் தொடங்கியிருந்தன. முதற்கண் அந்நிய முதலாளித்துவ அலுவலங்களுக்கும் சேவை செய்வதில் ஆரம்பித்து பின்பு சிறிது சிறிதாக அத்தகைய அலுவங்களையே தானும் அரவணைந்திருந்த உள்நாட்டு முதலீட்டாளர் கூட்டம் இலங்கையில் ஓர் உயர்வர்க்கமாக வளர முற்பட்டிருந்தது. இந்த உயர்வர்க்கம், மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய வகையில், தொழில் முயற்சிகளில் ஈடுபடும் ஓர் உண்மையான முதலாளித்துவ வர்க்கம் எனக் குறிப்பிட முடியாவிட்டாலும், நிச்சயமாக, முதலாளி வர்க்கத்தின் சில சாயல்களைப் புலப்படுத்தும் ஓர் உயர் மத்திய வர்க்கமாகத் தென்பட்டது. இவ்வுயர் மத்திய வர்க்கத்தினை வசதிகருதி மேல் மட்டம், கீழ்மட்டம் என இரு தரங்களில் பிரித்து நோக்க முடியும். மேல் மட்ட உயர் மத்திய வர்க்கத்தினரே நேரடியான பொருளாதார நடவடிக்கையை மேற் கொண்டவர்களாகவும் உயர்தர அரசாங்கப் பதவிகளை வகிப்போராகவும் விளங்கியிருந்தனர்.

Pereto என்ற அறிஞர் கூறும் உயர் வர்க்கத்திற்கு இடையேயான இரு வேறு தன்மை போல மேற்குறிப்பிட்ட இலங்கையில் உயர்தர மத்திய வர்க்கத்திலும் இரு வேறு தன்மையுள்ளோர் காணப்பட்டுள்ளனர். இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து புதிய அரசுகளில் ஆரம்பித்த (New States) அரசியல் பெருமளவிற்கு வயதிற் குறைந்தோராலேயே வழிநடக்தப்பட்டது. இவர்கள் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரி மாணவர்கள் போன்றோராகக் காணப்பட்டனர். இவர்கள் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும், நிலச் சுவாந்தர்களாகவும் காணப்பட்டனர்.

புதிய அரசுகளில் காணப்பட்ட உயர்குழாமினரின் வர்க்க முறைமை கூடியவரை மேலைத்தேசக் கலாசாரத்தை அடியொற்றியதாகவே காணப்பட்டது இவர்கள் அவ்வம் நாடுகளின் சுதந்திரங்களில் கொண்டிருந்த பற்றுக் காரணமாக சுதந்திர புருஷர்களாக எழிச்சி பெற்றனர். புதிய அரசுகளில் சுகந்திரப் போராட்டத்திற்கு முன்னணி வகித்த இவ்வுயர் குழாமினரின் கையிலேயே காலனித்துவ வாதிகள் அதிகாரங்களை ஒப்படைத்துச் சென்றனர். இலங்கையைப் பொறுத்த மட்டில் ஏகாபத்தியத்துடன் ஒத்துப் போவதாகவே பெருமளவு காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி கூடியவரை பிரித்தானியரை அரவணைத்த வகையிலேயே தமது காரியங்களை செயற்படுத்திச் சென்றனர். தவிரவும் ஐக்கிய தேசியக்கட்சி என்பது கொவிகம ஜாதியினரின் கட்சியாகவும் காணப்பட்டது.

ஒருவரை உயர்குழாம் என்ற அந்தஸ்துக்கள் சேர்த்துக்கொள்ள அவரது சாதி, கல்வி, தோற்றம், பிறரின் தொடர்புகளின் தன்மை போன்றனவும் அதிகாரமும் அமைகின்றது. Mosca என்ற அறிஞர் குறிப்பிடுவது போல அறிவு, ஆற்றல்மிக்க உயர்வர்க்கத்தினர் சிறுபான்மையினரான தம்மை திட்டமிட்டு ஒழுங்கமைத்து அறிவு ஆற்றலில் மட்டமான ஒழுங்கமைக்கப்படாத பெரும்பான்மையினரைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்த முடிகின்றது.

இவ்வாறான நிலைமைதான் புதிய அரசுகளின் அதிகாரம் ஒரு குடும்பத்திற்குள் கட்டுப்படுவதற்கும் காரணமாகும். இதை பிலிப்பைன்ஸ் பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற புதிய அரசுகளில் காணப்படுவதொன்றாகும் இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின்னான வரலாற்றில் இந்திரகாங்கிரசின் ஆட்சி அங்கு பிராமணரின் ஆட்சியாக கூடியவரை இருந்ததை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான இவர்களின் ஆட்சிக்கு இவர்கள் சிலவேளைகளில் பலாத்காரத்தையும் (Force) கபடத்தனத்தையும் (Cunningness)பிரயோகிக்கிறார்கள் என்று Pereto குறிப்பிடுகின்றார். இவர் மேலும் கூறும்போது பலாத்காரத்தையே உயர்குழாத்தினர் அதிகமாகப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றார்.

அதிகாரத்தை தக்க வைத்திருப்பதில் ஆர்வங்கொண்ட உயர்குழாத்தினர் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களையும் இன்ன பிற சமூக மதிப்பு மிக்க நிறுவனங்களையும் நிர்வகிப்பதனூடாக தமது தரத்தை சமூகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பொதுவாக இற்றைகளில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பக்கச்சார்பானவையாகவே இயங்கிவருவது கண்கூடு. இவ்வாறாக தமக்குச் சாதகமாகப் பலவற்றைப் பயன்படுத்துவதனூடாக எல்லா உயர்குழாமினருக்கும் தமது தரத்தை அதே நிலையில் வைத்துப் பேணிகொண்டிருப்பார்கள் என்று கூறிவிட முடியாது. ஒருகாலத்தில் உயர்குழாமாகக்கருதப்பட்டவர்கள் காலவோட்டத்தில் அத்தன்மையை இழந்துபோகலாம். அதுபோல இதுவரைக்கும் ஆழப்படுவதற்கே தகுதி உண்டென்று கருதப்பட்ட வெகுஜனங்களுக்கிடையிலிருந்து உயர்குழாமினர் தோன்றலாம் இதனை Pereto உயர்குழாம் சுழற்சிக் கோட்பாடு என்று குறிப்பிட்டு இவ்வுயர் குழாம் சுழற்சிக் கோட்பாடு தடைப்படுமானால் சமூகப் புரட்சியொன்று வெடிக்கும் என்று கூறுகிறார்.

அரசியலதிகாரத்தை உயர்குழாம் என்ற தகுதி அடிப்படையில் இதுவரை கைப்பற்றிக்கொண்டிருக்கும் ஒரு வட்டாரம் தமது நிலையை இழக்கின்றபோது அந்த இடத்தை நிரம்பத் தயாராகும் இன்னொரு உயர்குழாம் வட்டாரத்திற்கு அதிகாரத்தை கைமாற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அது திறமையற்ற ஆட்சிக்கு வழிகோலுவதுடன் வெகுஜனங்களிடையே தகுதியான சிந்தனையாளர்கள் பெருகி வளர்ந்து அதிகாரத்

தைப் பிரயோகிக்கும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வெகுஜனம்சார்பில் அழுத்தம் கொடுக்கும் சமூக சக்தியாகவளர்ந்து விடும். ஆகவே வெகு ஜனங்களிடையே புதிதாகத் தோன்றும் ஆட்சிக்குத்தகுதியுடைய உயர் குழாமினரை வெகுஜனங்களிடையே தொடர்ந்திருக்கவிடாது உயர் குழாத்தினர் தங்களுக்குள் இருக்கும் வேலையைச் செய்கின்றனர் என்று உயர்குழாம் கோட்பாடு கூறுகின்றது இதன்படி உயர்குழாமினர் பலாத் காரத்தை, கபடத்தையும் பாவிக்கின்றனர் என்ற (Pereto)வின் கருத் தானது நிரூபிக்கப்படுவதாக அமையும். உண்மையில் உலகிலுள்ள அரசியற் கட்சிகள் பல புதிய உயர் குழாமினரைத் தமக்குள் இழுக்கும் பணியைச் செய்கின்றதென்பதைச் சுட்டிக்காட்டமுடியும்.

மேலே கூறப்பட்டவாறு சமூகப்புரட்சி கருதிய Peretoவின் இயக்க வியற் கண்ணோட்டத்தின் (Dialechcal out look) அடிப்படையில் அமைந்ததென்றும் இயக்க மறப்பியல் (Metaphysical out look) ஏற்படுமிடத்து சமூகப் புரட்சி சாத்தியப்படுகின்றதென்றும் கொண்டால் சில நாடுகளின் உயர்குழாம் மிக நீண்ட காலத்திற்கு அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்களாகக் காணப்படுவது Mosca என்ற அறிஞர் குறிப் பிடுவது போல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை உயர்குழாமினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதனூடாகத்தான் சாத்தியப்படு கின்றதோ என்று எண்ணத் தூண்டுகின்றது. அவ்வாறாயினும் Pereto குறிப்பிடும் உயர்குழாம் சுழற்சிச் செய்முறை யென்பது நீண்டகாலத் தன்மை கொண்டதாக அல்லது சில சமூகங்களில் முற்றாக இல்லாததாக மொத்தத்தில் சமுதாயத்திற்கும் சமுதாயம் மாறும் போக்குடையதாக இருக்க வேண்டும்.

மிகக் குறுகிய வர்க்கமாக எடுத்துக்காட்டப்படும் இவ்வுயர்குழாம் சுரண்டல் தன்மை கொண்டதாக மாக்ஸிசவாதிகளாய் பேசப்படும் முதலாளித்துவ வர்க்கத்துடன் இணைவானதா? என்றொரு கேள்வியும் எழலாம். இதை உயர்குழாம் கோட்பாட்டாளர்கள் மறுக்கின்றார்கள் மாக்ஸிச வாதிகள் கூறும் வர்க்கத்தை உயர்குழாயினர் என்று எடுத்த எடுப்பில் கூறிவிட முடியாது. உயர் குழாமினரின் செயற்பாட்டை இயக்கவியல் பொருண்முதல் வாதத்தின் அடிப்படையில் விளக்கப்பட வில்லை. அத்துடன் Pereto கூறுவதானது உயர்குழாயினர் ஆளுவதற் கும் வெகுஜனங்கள் ஆளப்படுவதற்குமே தகுதியுடையவர்கள் என்பது மாக்ஸிசத்திற்கு முரணானது. எவ்வாறெனில் எக்கட்டத்திலும் முதலாளி களை ஆளத்தகுதி கொண்ட வர்க்கமாக மாக்ஸிசம் கருதவில்லை. இது போலவே Mosca 'உயர்குழாமினரின் ஆதிக்கமென்பது நடைமுறையில் சட்டரீதியானதாகவும், பொதுமக்களால் ஆட்சேபிக்கப்படாததாகவும் உள்ளது' என்று கூறுவதும் மாக்ஸிஸக் கோட்பாட்டிற்கு முரணானதாகும்

ஆகவே மாக்ஸிசம் கூறுகின்ற முதலாளிகள் யாவரும் உயர்குழாமினராக இருக்கலாம் ஆனால் உயர்குழாமினராக வரையறுக்கப்படுமிவர்கள் அனைவரும் முதலாளிகளாக இருக்க முடியாது.

மேற்குறிப்பிட்டவாறு சில தாக்கங்களை முன்வைக்க முடிந்தாலும் முதலாளித்துவ நாடுகளிற்கும் சோஷலிஷ நாடுகளிற்குமிடையிலான உயர்குழாமின் தன்மை பற்றியும் குறிப்பிட வேண்டும். உயர்குழாம் கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி அமெரிக்கா, பிரித்தானியா, போன்ற முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகளை விட சீனா, கியூபா போன்ற சமதர்மப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் உயர்குழாமினர் வலுவுள்ளவர்கள் என்பாகும். இதற்கு இவர்கள் பொருளாதார நிலையை விளக்குகின்றார்கள். அதாவது முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் உயர்குழாத்தினரிடம் அரசியலதிகாரம் மட்டும் காணப்படுமிடத்து சோஷலிஷ நாடுகளில் காணப்படும்

# பெண்களைப்பற்றி . . .

☐ நேரம் கெட்டநேரங்களில் கண்டதைச் சாப்பிடும் - பெண் சாப்பாட்டைத் தவிர வேறு ஆசைகள் இருக்காது. உணர்ச்சிகள் குறைவு தெய்வபக்தி அதிகமாக இருக்கும். வகை வகையான உணவுகளைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பாள்.

☐ பத்துப்பேருக்கு மத்தியில் சத்தம்போட்டுச் சிரிக்கும் பெண் - நிச்சயமாகச் சபலமுடையவளாக இருப்பாள். உணர்ச்சியின் ஒரு வகையான காரணமே சத்தம்போடும் சிரிப்பு. ஒரு வேலி ஒழுங்காக இருந்தாலும் உணர்ச்சி மிக்கவளாக இருப்பாள். சாதாரணமாக எதிலும் திருப்தி அடையமாட்டாள்.

☐ ஆடவர்களை பார்க்கும்போது முந்தானையைச் சரிப்படுத்திக் கொள்ளாத பெண் - எதிலும் அலட்சியமாக இருப்பாள். இருக்கும் செல்வத்தை ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரியாது. வாழ்க்கை நன்றாக இருக்கிறதா, கெட்டுப்போய் விட்டதா என்று ஆராயக் கூடத்தெரியாது பானால் போகட்டும் என்று புத்தி இருக்கும்.

☐ கூச்சம் இல்லாமல் ஆடவனின் கண்களை நேருக்கு நேர் பார்க்கும் கன்னிப்பெண் - துணிச்சல் உள்ளவளாக இருப்பாள். நடத்தைக்கேடு இல்லாவிட்டாலும் குணக்கேடு இருக்கும். அடங்காப் பிடாரியாகவும் இருப்பாள்.

- கண்ணதாசன்

உயர்குழாத்தினரிடம் அரசியலதிகாரத்தோடு, பொருளாதார பலமும் சேர்ந்திருப்பதால் சோஷலிஷ நாடுகளிலுள்ள உயர்குழாயினரே வலுவுள்ளதான வர்க்கம் என இக் கோட்பாட்டாளர்கள் கூறுகின்றார்கள்.

இது இவ்வாறிருக்க ஏற்கனவே குறிப்பிட்டவாறு உயர்குழாம் கோட்பாடுகள் பழமைவாத, தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்டதென்று கொள்ளுமிடத்து இதில் மரபுரீதியான உயர்குழாம் கோட்பாட்டின் பிந்திய கால அபிவிருத்தியென்று பன்மைவாதம் (Pluralism) விடயத்தை இனங்காண முடியும். உயர்குழாம் கோட்பாட்டாளர்கள் அரசியலின் அதிகாரமென்பது ஒரு சிலரின் கைகளில் குவிந்து காணப்படுகின்றது என்று கூறுவதை மறுதலிக்கும் பன்மைவாதிகள் சமுகத்திலுள்ள குழுக்கள், சங்கங்கள், சபைகள் போன்றவற்றில் அதிகாரமானது குவிந்து காணப்படுவதாகக், கூறுகின்றார்கள். இதனை உறுதிப்படுத்த முனைபவர்களில் ஒருவரான Dahl என்னும் அறிஞர் பன்மைச் சமுகம் நிலவும் அமெரிக்காவில் அரசியலதிகாரமானது நாடுபூராவும் பரந்து காணப்படும் பல்வேறுபட்ட குழுக்களிடமே காணப்படுகின்றதேயன்றி தலைநகர் வாஷிங்டனில் அல்ல, என்று கூறப்பட்டுள்ளார்.

மேற்படி இப்பன்மைவாதக் கருத்தானது அமெரிக்காவை மட்டும் உதாரணங்கொள்வதாக இருப்பது குறைபாடுடையதாகும். முக்கியமாக புதிய அரசுகளில் (New States) பன்மைவாத அடிப்படையைக் காண்பது என்பதைவிட உயர்குழாம் கோட்பாட்டின் படியான ஒரு சிலரின் கையில் அதிகாரம் குவிந்து காணப்படுகின்ற தன்மையே காணப்படுகிறது. உண்மையில் இதன்படி பாகிஸ்தான், கானா போன்ற நாடுகளில் இராணுவ ஆட்சி இதற்கு சான்றாக இருக்கிறது.

ஆகவே அரசறிவியல் பார்வையில் உயர்குழாம் கோட்பாடானது விரிவுபட்ட கர்க்கத்தை வேண்டி நிற்பதுவும் நாட்டிற்கு நாடு வெவ்வேறு அர்த்தத்தை அளிப்பனவுமாகும். இதன்படி மரபுரீதியான தீவிரவாத சிந்தனைகளையும் பிந்தியகால அபிவிருத்திக் கருத்துக்களையும் கொண்டு காணப்படும் இவ்வுயர்குழாம் கோட்பாடானது அரசியல் மாணவர்களினதும், ஆய்வாளர்களினதும் பார்வையில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது இக்கோட்பாட்டின் தன்மைகள் காலகதியில் மாறுபட்டாலும் ஏதோ ஒருவகையில் உயர்குழாம் கோட்பாடு அரசியலதிகாரத்தில் நிலைபெற்றிருக்கும். ★

---

# அடுத்த இதழ்

மாற்றம் பாதை: 05 அதிக பக்கங்களுடன் கனதியான ஆண்டிதழாக மலர்கிறது. உங்களுடைய சஞ்சிகைக்கு ஏற்ற தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

ஸ்கூல் ஃபீஸ் கட்ட இன்றுதான் கடைசி நாள். சௌமியா பயந்து கொண்டே அப்பாவை எழுப்பினாள். அவளின் நச்சரிப்புத் தாங்காமல் திட்டிக்கொண்டே எழுந்தான் கோபி

மனைவி கொடுத்த கோப்பியை தொண்டைக்குழியில் ஊற்றிக் கொண்டு முகத்தைக் கழுவி தலை சீவிக்கொண்டு சட்டையை எடுத்து மாட்டி, விறுவிறுவென்று வாசலுக்கு வந்து எரிச்சலுடன் சைக்கிளை எடுத்தான். ''வாயேன், சீக்கிரம் போகலாம்'' என மகளைக் கோபத் துடன் கூப்பிட்டான்.

அவளை சைக்கிளில் ஏறி உட்காரச் சொன்னவன், தற்செயலாக அவள் கால்களைப் பார்த்தான். உடன் கோபம் தலைக்கு ஏற— — ''முண்டம்! முண்டம் ...... செருப்பு எங்கே? போனமாசம் தானே புதுசா வாங்கினேன், மறுபடி தொலைச்சிட்டியா? கோபத்துடன் சைக் கிளை ஸ்ராண்ட் போட்டு நிறுத்தி மகளின் தலை முடியைப்பிடித்து இழுத்துக் கன்னத்தில் ஓர் அறைவிட்டான். அவன் இழுத்த வேகத்தின் வலியைத் தாங்க முடியாமல் சௌமியாவின் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டு கன்னத்தில் வழிந்தது.

''நேற்று க்ளாஸ்ல மறந்து வெச்சிட்டேன். மன்னிச்சிடுங்க..... இனிமேல் தொலைக்கமாட்டேன்'' வலியின் வேதனை வயிற்றில் இறங்க வயிற்றைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

# அவமானம்

'' எப்பப்பாரு செருப்பைத் தொலைக்கிறதே வேலையாப் போச்சு .. இன்னிக்கு செருப்பு மட்டும் கிடைக்கலைன்னா பாரு உன் தோலை உரிச்சு செருப்பாத் தைக் கிறேன்.........'' மகளைப் பிடித்து இழுத்து சைக்கிளில் நச்சென்று உட்கார வைத்து, சைக்கிளை ஓட்டினான்.

ஸ்கூல் வந்ததும் சைக்கிளை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டுப் பணம் கட்டும் இடத்தை நோக்கி நடந்தான். அதற்குள் தன் வகுப்பறைக்குச் சென்று திரும்பினாள் சௌமியா. ''என்ன செருப்பு கிடைச்சுதா?'' உறுமலுடன் அவளை நெருங்கினான் கோபி. ''செருப்பை காணலைப்பா. யார் எடுத்தாங்கன்னு தெரியலை'' என்றாள் சௌமியா நடுங்கும் குரலில். அது ஒரு பொது இடம் நாலுபேர் வேடிக்கை பார்ப்பார்கள் என்பது பற்றியெல்லாம் துளியும் கவலைப்படாமல் மகளை அடிக்க நினைத்த கோபி, மகள் கூறியதைக் கேட்டு உறைந்து போய் நின்றான் அவமானத்தால் குன்றிப்போன சௌமியா, கலங்கியா கண்களுடன் ''அப்பா... ப்ளீஸ்! என் வகுப்புப் பிள்ளைங்களெல்லாம் வேடிக்கை பார்க்கிறாங்கப்பா இங்கே அடிக்காதீங்க அந்த மரத்துக்குப் பின்னால் போய் என்னை அடிங்கப்பா இப்ப நீங்க அடிச்சிங்கன்னா அப்புறம் உங்களை வகுப்பில் வைத்து அவமதிப்பா பேசுவாங்கப்பா அதை என்னால் தாங்க முடியாது'' என்றாள் பரிதாபமாக.

தனக்கு வலிப்பதைவிட அப்பாவுக்கு அவமானம் வரக்கூடாது என்று நினைக்கும் தன் மகளின் முன்னே தன் செய்கையை நினைத்து வெட்கப்பட்டான் அவன்.

நன்றி : விகடன்

# பொது அறிவுப் போட்டி: 04

1) "அடியார்க்கு நல்லார் ஆராய்ச்சி" என்ற ஆய்வு நூலை 1941 இல் எழுதி இந்தியாவில் வெளியிட்ட இலங்கை ஆராய்ச்சியாளர் யார்?

2) உலக அதிசயங்களில் ஒன்றான சலவைக்கல்லால் ஆக்கப்பட்ட கோபுரம் ஒன்று இத்தாலியில் உள்ளது. தனது செங்குத்தச்சில் இருந்து 13⁰ சரிந்துள்ள இதன் பெயர் என்ன?

3) ஈழத்து நாவல்களில் சிறந்ததாகக் கருதப்படும் 'காட்டாறு' நாவலின் ஆசிரியர் யார்?

4) பாக்கு நீரிணையை முதன்முதலில் நீந்திக் கடந்தவர் யார்?

5) ஒரு பசுமாடு தன் கொட்டிலில் இருந்த விளக்கைக் காலால் உதைத்து உருட்டியதனால் ஒரு நகரமே எரிந்து சாம்பலாகியது. அந்த நகரம் எது? எந்த நாட்டில் உள்ளது?

நன்றி : தமிழ்த்தாய் மன்றம்

(உங்கள் விடைகளை 02-10-1993 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'மாற்றம்' பணிமனைக்கு அனுப்பி வையுங்கள். சான்றிதழ் வழங்கப்படும்.)

---

## பொது அறிவுப் போட்டி: 03 க்கான விடைகள் :

1) திருக்குறள் 2) சந்திரசேகர் 3) (i) யேசுநாதர் (ii) ஜெருசலேம் 4) யூசெப் கரிபால்டி (ஜோசப் கரிப்பால்டி) 5) இந்தியா

பொது அறிவுப் போட்டி: 03 இல் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களுக்கு சான்றிதழ் உண்டு. 'மாற்றம்' பணிமனை, புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேரில்வந்து பெற்றுச்செல்லுமாறு வேண்டுகிறோம்.

ஆ-ர்.

---

## பொது அறிவுப் போட்டி படிவம் — இல. 04

பெயர் : ..............................................

விலாசம் : ..............................................

மு. கு. விடைகளுடன் இப்படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

# விவாத மேடை

வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளுள் இலங்கையும் ஒன்றாக உள்ளது. இங்கு நடைபெற்று வருகின்ற ஆட்சியின் விளைவினால் தாக்குண்ட எமது தமிழ் இனம் தமிழ்த்தாயின் விடிவிற்காகப் போராடி வருகின்றது. எங்கள் தமிழ் இன மக்கள் அனைவரும் எமது சமூகத்தவர். இந்த "சமூகம் ஒரு கொடிய பிசாசைப் போன்றது."

எமது சமூக மக்களில் ஒருசிலர் இன்னமும் தமது சுய நலன்களையே பெரிதென நினைக்கிறார்கள். அடுத்தவன் துன்பத்திலும் இன்பமடையும் மனம் கொண்டவர்களாயுள்ளார்கள். எமது சமூகத்தில் களவு, கற்பழித்தல், கொலை, விபச்சாரம், கொள்ளலாபம்அடித்தல், லஞ்சம், எதிரிக்கு உளவு சொல்லுதல் (உளவாளிகள்) போன்ற குற்றச்செயல்களைப் புரிபவர்களையும் பத்திரிகைகள் மூலமாக அறியக்கூடியதாயுள்ளது. 'எரிகிற வீட்டில் கொள்ளி பிடுங்கியது. லாபம்' என்று எண்ணுகின்ற மக்களும் இந்த சமூகத்தில் உள்ளார்கள். ஒருவன் எவ்வகைக் குற்றமுமின்றி ஏழ்மை நிலையில் வாழ்ந்தால் அவனை ஏளனப் பார்வை பார்க்கிறது. இறைவன் பெயரைச் சாட்டித்

## 'சமூகம் ஒரு கொடிய பிசாசைப் போன்றது'

### ஆதரவான கருத்துக்கள்

தங்களுக்குப் பணம் சேர்ப்பவர்களும் இச்சமூகத்தில் இருக்கிறார்கள். மனிதனை மனிதன் சுரண்டி வாழுகிறான். போலிக் கௌரவத்தைப் பெரிதாக நினைக்கிறார்கள். ஒரு சட்டி பாலுக்குள் ஒரு துளி விஷம் ஊற்றினாலும் அது விஷமாகவே தெரிகிறது. ஒருசில கொடியவர்களினால் நல்லவர்களைப் புரிய முடியாமலும் போய்விடுகிறது. இதனால் சமூகம் கொடிய பிசாசைப் போல தோன்றும் ஆகவே அந்த ஒரு சிலரும் திருந்தினால் சமூகம் சிறப்பு வாய்ந்ததாக அமையும்.

ந. தேவா

---

வாசகர்களே !

'சமூகம் ஒரு கொடிய பிசாசைப் போன்றது' என்பதற்கு ஆதரவான கருத்துக்கள் மட்டும் அன்றி எதிரான கருத்துக்களையும் எழுதி அனுப்புங்கள்.

ஆ-ர்

# பிடிப்பு

இனியவளே !
என் இதயத்தின்
வரவேற்பறையில்
தானாக வந்தமர்ந்தவர்களுண்டு
இருந்தவர்களை எழுப்பி
உட்கார முயன்றவர்களுமுண்டு
இடமின்மையால்
நாற்காலியோடேயே
வந்தவர்களுமுண்டு,
அவர்களெல்லாம்
சொல்லிக்கொள்ளாமலேயே
புறப்பட்டு விட்டார்கள்
உன்னை நானாக அழைத்ததாலா
இன்று நிரந்தரமாகிவிட்டாய்.

இனியவளே !
குருதியமுக்கத்தின் புதிய அலகு
கிலோ பாஸ்காலாமே !
என் இதயக்குடியிருப்பின்
எல்லா அறைகளுமே
இனி உனக்குத்தானே சொந்தம்
சந்தம் பொருந்திய
அதன் துடிப்பைக்கேள் !
இப்புதிய அலகையே
நீ மாற்றிக்கொள்வாய்.
உன் பெயரையல்லவா
அது உச்சரிக்கின்றது.

பொ. ஐங்கரநேசன்

குருதியமுக்கம் அலகு — $\frac{120}{80}$ மி. மீ. இரசம்

புதிய அலகு — $\frac{120 / 7.2}{80 / 7.2}$ கிலோ பாஸ்கால்

தொகுதி எண் குருதியை இதயம் வெளியே பம்பும்போது நிலவும் அமுக்கத்தையும் பகுதி இதயத்தினுள் நுழையும்போது நிலவும் அமுக்கத்தையும் குறிக்கும்.

# சரம்

• மலரன்னை

தங்கச்சி சுதா நல்ல நித்திரை. நித்திரையிலும் அடிக்கடி விசும்பிற சத்தம் கேட்குது. — அம்மாவுக்குப் பக்கத்தில் படுத்திருக்கிற தங்கச்சியை ஒருக்காத் திரும்பிப் பார்க்கிறான்.

'பாவம் தங்கச்சி'

என்ரை மனம் சொலுது. அம்மா, நல்லாய்த்தான் அடிச்சுப்போட்டா. இந்த அம்மா இப்படித்தான். இப்ப கொஞ்சநாளாய் அம்மாவுக்குக் கோபம் வாறது கூடத்தான். எல்லாம் அப்பாவுக்குச் சுகமில்லாமல் வந்தபிறகுதான் அம்மாவும் இப்படி மாறிவிட்டா. முந்தி நாங்கள் எங்கடை சொந்த ஊரிலை இருக்கைக்க நாங்கள் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தம். எவ்வளவு வசதியாய் வாழ்ந்த நாங்கள் வசாவிளானிலை எங்கடை வீடு பெரிசு, வளவும் தோட்டமும் பெண்ணாம் பெரிசு.

அப்ப நான் அஞ்சாம் ஆண்டில் தான் படிச்சநான். தங்கச்சி பள்ளிக்குப் போறதில்லை. அம்மா எந்தநேரம் பார்த்தாலும் சந்தோஷமாய்த்தான் இருப்பா. நாங்கள் என்ன குளப்படி செய்தாலும் ஏச மாட்டா. பிள்ளையள் அப்படிச் செய்யக்கூடாது எண்டுதான் சொல்லுவா. அம்மா எங்களுக்கு அடிச்சதாய் எனக்கு ஞாபகமே இல்லை.

அப்பா, வெள்ளென எழும்பின உடன் தோட்டத்துக்குப் போயிடுவர். நானும் தங்கச்சியும் அப்பா தோட்டத்துக்கு 'வாட்டர் பம்ப்' பால இறைக்கிற தண்ணியிலதான் குளிக்கிறநாங்கள். வருசப்பிறப்பெண்டால் எங்களுக்குப் பெரிய புளுகம். அப்பா யாழ்பாணத்துக்குச் சயிக்கிளிலை போறவர் சில நேரத்திலை என்னையும் கூட்டிக் கொண்டு போறவர். அங்கைதான் எங்கள் எல்லாருக்கும் புது உடுப்பு வாங்கி வருவார். அதுமட்டுமில்லை. சீனவெடி, வாணம் எல்லாம் வாங்கியாறவர். அப்பா எனக்கு வட்டப்பெட்டி. தங்கச்சிப் பிள்ளைக்கு சக்கரவாணம், பூமத்தாப்பு எண்டு எல்லாம் வாங்கிக்கொண்டு வருவார். சிலநேரத்திலை அப்பாவும் எங்களோடை சேர்ந்து வாணம் விடுவார். வெடியும் கொழுத்துவார். அம்மாவுக்கு பலகாரம் சுடுகிறவேலை மட்டும் தான். தங்கச்சிக்கு விருப்பமெண்டு இனிப்புப் பலகாரமும். எனக்கெண்டு உறைப்புப் பலகாரமும் சுடுவா. எங்கடை கொண்டாட்டத்தைச் சொல்லத்தேவையில்லை. வருசம் பிறக்கேக்க

**திருப்தி**

நாங்கள் எல்லாரும் புது உடுப் புப் போட்டுக்கொண்டு கோயி லிலை நிப்பம். இப்ப... இந்தக் கொட்டிலுக்கை இருந்துகொண்டு உதுகளை யோசிச்சுப் பார்க்க, உண்மையாத்தான் எனக்கும் அழுகை வருகுது.

இப்ப நாங்கள் ஊரைவிட்டு வெளிக்கிட்டு மூண்டு வருசத் துக்கு மேல இருக்குமெண்டு நினைக்கிறன். நானும் தங்கச்சி யும் இப்ப ஒரே பள்ளிக்கூடத் திலைதான் படிக்கிறம். ஏதோ ஒருமாதிரி இவ்வளவு காலமும் நாங்கள் சீவிச்சிட்டம் அப்படியே இருந்திருப்பம். அதுக்கிடையிலை அப்பாவுக்கு வருத்தம் வந்திட்டுது அப்பா போய் ஆருக்கும் கூலி வேலைசெய்து குடுத்துச் சம்பளம் வாங்கி வாறவர். நிவாரணமும் தாறவை. அதனாலை ஒரு பிரச் சனையுமில்லாமல் சமாளிச்சம். அப்பாவுக்கு இருந்தாப்போல நெஞ்சுவலி வந்திட்டுது. அம்மா வாய்வாலைதான் வலிக்குதாக்கும்

## முதலில் கண்டுபிடித்தவர்கள்

டாங்கிகள் – கவின்ரன்
இயந்திரத் துப்பாக்கி – சற்லிங்
சுழல் துப்பாக்கி – ஹெலற்
ஹெலிகொப்ரர் – பிறிகுவே
திசையறி கருவி – சீனர்

தொகுப்பு: ஜெ. செந்தூரன்

## சிறுகதைப் போட்டி : 02

வாசகர்களே !

தரமான கருத்தாழமுள்ள சிறு கதைகளை 'மாற்றம்' சஞ்சிகை யில் பிரசுரிப்பதற்காக எதிர் பார்க்கின்றோம். தெரிவு செய் யப்படும் ஒரு தரமான சிறு கதைக்கு ரூபா 99.00 பரிசாக வழங்கப்படும்.

ஆ - ர்

எண்டு கைமருந்துகள் செய்து பார்த்தவ. அதுக்கும் சுகம் வர யில்லை. பிறகு வீட்டுக்குக்கிட்ட இருக்கிற ஆஸ்பத்திரியிலும் மருந்து வேண்டிக்குடுத்தது. அது க்கும் சுகம் வரவில்லை அதுக்கும் போட்டுவா எண்டிட்டுது. பிறகு தான் அம்மா யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டுபோய் பெரியாஸ்பத்திரி யிலை காட்டினவ அங்கைதான் பெரிய டொக்டர் இருக்கிறாராம் அங்கை வடிவாய்ச் சோதிச்சுப் பாக்க வேணுமெண்டு நாலு நாளாய் நிப்பாட்டிப் போட்டினம். அப்படிச் சோதிச்சுத்தான் வருத்தத் தையும் கண்டுபிடிச்சவை. அப்பா வும் இருதயம் பலவீனமாயிட்டுதாம் அதனால கஷ்டமான வேலைஒண் டும் செய்யக்கூடாதெண்டு சொல் லிப்போட்டினம். இப்ப அப்பா எந்தநேரமும் படுத்துத்தான் இருப் பர் எழும்பிக் கொஞ்சதூரம் நடந் தாலும் இளைக்கும் எனக்கொண் டால் பாக்கப் பாவமாயிருக்கும். அப்பா சுகமாயிருக்கைக்கை எவ்

# அட்டைப்படக் கவிதை போட்டி

அட்டைப் படத்தை பார்க்க என்ன தோன்றுகிறது என்பதை கவிதையாக எழுதி அனுப்புங்கள் சிறந்த கவிதை எழுதியவருக்கு 'கவிஞர்' பட்டம் வழங்கி அவருடைய கவிதை (மாற்றம்: 05) ஆண்டுமலரில் பிரசுரமாகும்.

வளவு வேலைகளைச் செய்யிறவர். இப்ப வர வர அப்பாவுக்கு நல்ல சாப்பாடுகள் குடுக்கவும் வசதியில்லை. அம்மாவுக்கு இதுகளை நினைச்சுத் தக்னாகும் கோபம்வாறது கூட.

தங்கச்சி சுதா சின்னப்பிள்ளை தானே. அவளுக்கு இதுகள் விளங்குமோ அவள், தன்னோடை படிக்கிற பிள்ளைகளெல்லாம் வருசப்பிறப்புக்கு புதுச்சட்டை வாங்கி இருக்கினமாம். தனக்கும் வாங்கித் தரச்சொல்லிக் கேட்டா அதுக்கு அம்மா சொன்னா.

"சுதா இஞ்சை பார் மேனே. அப்பாவுக்கு இப்ப சுகமில்லை. உழைக்க ஏலாது. பின்னை அம்மாவுக்கு எங்கால காசு. பிரச்சினைகள் தீர்ந்து நாங்கள் எங்கடை ஊருக்குப் போயிட்டமெண்டால், வளவுக்கை வாற பிரயோசனமே வடிவாய்ச் சீவிக்கக் காணும். இப்ப இந்தக் கஷ்டத்துக்கை என்னெண்டு வாங்கிறது. நீ சாமியை கும்பிடு. அப்பாவுக்கு நல்ல சுகம் வரவேணுமெண்டு. அப்பாவுக்குச் சுகம் வந்ததும். அப்பா வேலைக்குப்போய் காசு கொண்டு வருவர். நான் உடன சுதாக்குட்டிக்குப் புதுச்சட்டை வாங்கித்தருவன்.''

சுதா சரியெண்டு கேட்டுக் கொண்டிருந்தவள். அதுக்கிடையிலை பக்கத்து வீட்டிலை இருக்கிறபிள்ளை வெளிநாட்டிலை இருந்து தனக்குவந்த புதுச்சட்டையைக் கொண்டுவந்து இரவுக்குக் காட்டிப்புளுக, இவவுக்கும் ஆசை வந்திட்டுது. சின்னவள்தானே. ஆசையை அடக்கத்தெரியேல்லை அழுது அம்மாவைக் கரைச்சல் படுத்தின. அம்மா சொல்லிசொல்லிப் பாத்தா. சுதா கேக்காமல் அடம் பிடிச்சா. அம்மாவுக்கு நல்லாய்க் கோபம் வந்திட்டுது. ஒரு தடியை எடுத்து நல்லாய் அடிச்சுப்போட்டா.

சுதா அழுதுகொண்டே இருந்திட்டுச் சாப்பிடாமலே படுத்திட்டால் பாவம்! எண்டு நினைச்சுக் கொண்டு திரும்பி அவளைப்பாத்தன். உதென்ன! அம்மா சுதாவுக்குப் பக்கத்திலை இருந்து கொண்டு அவளை தடவிக்கொண்

---

ரசிகர் – "ரசிகர் துண்டுகளுளே எழுதிக்கொடுத்த ஒரு பாட்டைக்கூட நீங்க கச்சேரியிலே பாடலியே!''

பாடகர் – "அந்தப் பாட்டெல்லாம் ரசிகர்களுக்கு ரொம்பப் பிடிச்ச பாட்டாம். அதனால தயவுசெய்து பாடாதீங்கன்று எழுதியிருக்காங்க!''

டிருக்கிறா. அம்மாவின்ரை முகத்தைப் பாத்தன். அழுகிறபேரல கிடக்கு. தங்கச்சிக்கு அடிச்சுப் போட்டன் எண்ட கவலையில அழுகிறாவோ, எனக்கெண்டால் அம்மாவையும் தங்கச்சியையும் பாக்க என்னமோ செய்யுது.

எனக்கு ஒரு வைராக்கியம் வந்திட்டுது. எப்படியும் தங்கச்சிக்கு புதுச்சட்டை வாங்கிக்குடுக்க வேணும். படுத்திருந்து யோசிச்சுப்பாத்தன் அம்மாவிட்டை கேட்டு நிவாரணத்துக்குத் தாற அரிசியிலை இல்லாட்டில் மாவிலை கொஞ்சத்தை வித்துச் சட்டை வாங்குவமோ சீ! அது சரியில்லை பிறகு எங்களுக்குச் சாப்பாடும் இல்லாமல் போயிடும். நானும் அம்மாவும் சாப்பிடாமல் விடலாம் தான். எண்டாலும் அப்பா நாங்கள் சாப்பிடாட்டித்தானும் சாப்பிட மாட்டார். அப்பாவும் ஏலாதெண்டாலும் நாங்களும் அம்மாவும் வடிவாய்ச் சாப்பிடுறமோ எண்டு பாத்துக்கொள்ளுவார். அவருக்கும் சரியான கவலை. நல்லாய் மெலிஞ்சு போறார். நான் தான் ஏதும் சின்ன வேலை செய்து உழைக்கப் பாக்கவேணும். அதுக்காகப்படிப்பைவிடவும் மனமில்லை கடவுளே! முருகா! நீதான் எனக்கொரு வழிகாட்டவேணும் எண்டு யோசித்தபடியே நித்திரையாய்ப் போனன்.

★ ★ ★

"விடைத்தாளில் பென்சிலால் விடை எழுதியது யார்?"

வகுப்பிற்கு வந்த தமிழ் சேர் பலமாய்ச் சத்தம் போட்டார். எனக்கு கை, கால் எல்லாம் நடுங்கத் துவங்கியீட்டது. என்ரை போல்பொயின்ற் பேனையிலை மை முடிஞ்சிட்டுது. அம்மாவிட்டை என்னெண்டு காசு கேக்கிறது. அவவிட்டை இல்லை எண்டு தெரியும். வகுப்பிலை எல்லாப் பெடியளிட்டையும் கேட்டன் 'ஆரன் ரெண்டு பேனை வைச்சிருந்தால் ஒண்டைத் தாங்கோடா' எண்டு ஒருத்தரும் இல்லை எண்டு போட்டான்கள். பின்னை நான் வாறது வரட்டும் எண்டு பென்சிலாலையே விடை எழுதினன். இப்ப சேர் கேக்கிறார். நான் என்ன செய்யிறது?

# சிந்தனைச் சொல் அகராதி

| | | |
|---|---|---|
| இரட்டைச் சூட்டடுப்பு | : | விறகின் சிக்கன வங்கி |
| புத்தகம் | : | அறிவை வளர்க்கும் அமுதம் |
| குப்பி விளக்கு | : | தமிழரின் தலைவிதி |
| நுளம்பு | : | ஊசிபோடும் அம்மையார் |
| முருங்கைக்காய் | : | தமிழரின் சூப்புத்தடி |
| இருதயம் | : | உயிர்களை நிர்ணயிக்கு இயந்திரம் |

- நிலாமகன் -

நான் மெல்ல எழும்பித் தலையைக் குனிந்து கொண்டு மெதுவாக 'நான் தான் சேர்' எண்டு சொன்னன். இதென்ன! எனக்குக் கண்ணீர் வருகுது. மற்றவை நான் அழுகிறன் எண்டெல்லே நினைக்கப்போகினம்.

மற்றப் பெடியன்கள் எல்லாரும் கொல்! எண்டு சிரிச்சினம் சேர் எனக்குக்கிட்ட வந்தார். அடிதான் விழப்போகுது எண்டு நினைச்சுக்கொண்டு பேசாமல் நிண்டன் சேர் முதுகிலை தட்டிப் போட்டுக் கேட்டார்.

'' என் மேனை பேனையைத் துலைச்சுப் போட்டியோ?''

'' இல்லை சேர் என்ரை பேனையிலை மை முடிஞ்சு போச்சுது. வேற பேனை வாங்கித்தர

---

ஒரு பையனைத் தந்தை கேட்டார். 'மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?

பையன் சொன்னான். அது ஆச்சரியமில்லை அப்பா! தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே அது தான் ஆச்சரியம்'

'இறைவா! மனிதனுக்கு நீ எண்ணங்களை வைத்ததில் ஆச்சரியமில்லை. அந்த எண்ணங்களிலேயே அவன் வெந்து வெந்து அழிகின்றானே அதுதான் ஆச்சரியம்'

நன்றி : 'சிருஷ்டி ரகசியம்'

---

'' ஏதாவது தாலித்திருட்டு கேஸ் கோயில் திருட்டு கேஸ் இருந்தா சொல்லுங்க சார் . ''

' ஏன்யா?''

'' நான் அட்டெண்ட் பண்ணுகின்ற முதல் கேஸ் மங்களகாமா இருக்கட்டுமேன்று தான் ''

---

அம்மாவிட்டைக் காசில்லை.' சொல்லி முடிய முந்தி அடக்க ஏலாமல் கண்ணீர் பொத்துக் கொண்டு வந்திட்டது. நல்ல காலம் சேர் எனக்கு அடிக்க இல்லை. 'பள்ளிக்கூடம் விட்ட பிறகு என்னை வந்து சந்தி' எண்டு சொன்னார். விடைத்தாள்களை எல்லாருக்கும் தந்தார். எனக்குத்தான் மாக்ஸ் கூட. அது தான் அடிக்கேல்லையோ இருக்கும் ஒரு வேளை.

* * *

பள்ளிக்கூடம் விட்டபிறகு நான் பின்னேரத்திலை சேர் வீட்டை போயிடுவன். சேரின்ரை அம்மா வயசு போனவ. நான் தண்ணி அள்ளிக்குடுத்து, விறகு வெட்டிக் குடுத்து வளவு கூட்டிச்சின்ன வேலையள் செய்து குடுப்பன் சேரைப் போலத்தான் அவரின்ரை அம்மாவும் நல்லவ. சேர் எனக்குத் தெரியாத பாடங்களை கேட்டால் சொல்லித்தருவார் படிப்புக்குத் தேவையானதுகளை வாங்கித்தருவார்.

இண்டைக்கு வருசப்பிறப்பு நேற்று வந்தநான் சேர் வீட்டுக்கு வீடு தூசு தட்டிக்கழுவ, வளவு

"குற்றவாளியோட கைரேகை கிடைச்சுதா?"

"முழுக்கைரேகையே கிடைச்சுது சார்!"

"அப்படி! அப்ப உடனே அதை நம்ம கைரேகை ஜோசியர் கிட்ட காண்பி ..."

துப்பரவாக்க எண்டு சேரோடு சேர்ந்து வேலையள் செய்கநான் இருட்டோடையே எழும்பி மருத்து நீர் வைச்சு முழுகி, சேர் வேண்டித்தந்த புது உடுப்புகளைப் போட்டுக்கொண்டு முற்றத்தில் பொங்கிறதுக்கு உதவி செய்தான். பொங்கிப் படைச்சபிறகு சாப்பிட்டுவிட்டு, வீட்டுக்குப் போக வெளிக்கிட்டன். சேரின்ரை அம்மா தங்கச்சிக்கு வாங்கின சட்டையையும், பொங்கல், பலகாரங்கள், வாழைப்பழம் எண்டு எல்லாத்தையும் பாக்கில போட்டுத் தந்துவிட்டா. எனக்கெண்டால் காத்திலை பறக்குமாப்போல இருந்துது அவ்வளவு புளுகம். என்னெண்டு வீட்டை வந்தனெண்டு தெரியேல்லை.

அங்கை வரேக்கையே சுதா! சுதா! எண்டு கூப்பிட்டுக்கொண்டு வந்தன். தங்கச்சி ஓடிவந்து, அம்மா இஞ்சை ஓடிவாங்கோ. அண்ணைப்பிள்ளை புதுச்சட்டை போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்" எண்டு கத்தினா.

'என்ரை தங்கச்சியை விட்டிட்டு அண்ணை மட்டும் புதுச்சட்டை போடுவேனே!" எண்டு சொல்லிக் கொண்டே சட்டையை எடுத்துக் குடுத்தான்.

அம்மா கையை நீட்டி வாங்கிக் கொண்டே, "இப்பிடி நெஞ்சில ஈரமுள்ள மனிசரும் இருக்கிறபடியால தான் உலகத்தில இன்னும் மழை பெய்யுது" எண்டு சொல்லித் தங்கச்சிக்குப் புதுச்சட்டையைப் போட்டு விட்டா.

எனக்கு அடக்கேலாமல் கண்ணீர் வரப்பாக்குது. நான் ஓடிப் போய்த் தங்கச்சியைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினன். கொஞ்சிப்போட்டு நிமிர்ந்து பாக்கிறன் அப்பாவும், அம்மாவும் எங்களைப் பாத்தபடியே நிக்கினம். அவையின்ரை கண்களிலும் கண்ணீர்.

(யாவும் கற்பனை)

(சிறுகதைப் போட்டி 01 இல் பரிசு பெற்ற சிறுகதை)

ராமு – "பாட்டிகூட ரொம்ப விஷயம்தெரிஞ்சு வெச்சிருக்கா!"

மணி – "எப்படிச் சொல்றே?"

ராமு – 'சகடையிலே போறவனே'ன்று திட்டறாளே!

---

உன்னை ஒருவர் வணங்கினால் அவரைவிட அதிகமாகப் பணிவோடு நீயும் வணங்கு அல்லது அதே அளவானது திருப்பிச்செய்.

– குர்ஆன்.

சுந்தரிக்கு தனது நீண்ட ஆசை நிறைவேறிய திருப்தி ஒருபுறம் இந்தப் பிரச்சனையான நேரத்திலே கிளாலியால் கொழும்புக்குப் போனவர் போய்ச் சேர்ந்தாரோ! என்ன நடந்ததோ! என்னவோ! என்ற புது மாப்பிளையைப் பற்றிய ஏக்கம் மறுபுறம்.

சுந்தரியின் ஏக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த மாதிரி வாசலிலே தபாற்காரனின் மணியோசை கேட்டது.

சுந்தரி ஆவலுடன் கடிதத்தை வாங்கிப் பிரித்தாள். அங்கே ஓர் ஆச்சரியம் காணப்பட்டது. அக்கடிதத்தில் என்ன விடயம் எழுதியிருக்கின்றது என வாசிக்க முடியாதளவிற்கு (தமிழா, சிங்களமா என்றளவிற்கு) அக்கடிதம் காணப்பட்டது. அவளால் சரியாக வாசிக்க முடியா

# ஊருக்கொரு சுந்தரி



மல் போகவே அவள் தனது தாயாரிடம் வாசித்துக்காட்டும்படி கடிதத்தை நீட்டினாள். அதைபபார்த்த தாயார் இதை என்னாலும் வாசிக்க முடியவில்லை, பக்கத்து வீட்டு சுப்பன் இப்ப சோதிகடைக்குக் கிட்டவாகத் தான் போய்க்கொண்டிருப்பான் (சுப்பன் ஓர் தபாற்காரன்) அவனிடம் ஓடிப்போய்காட்டு அவன் வாசித்துச் சொல்லுவான் என்றார். உடனே சுந்தரி சுப்பனிடம் கடிதத்தை கொண்டோடினாள். அவனும் எழுத்து எனக்கு விளங்கவில்லை தபால் அதிபர் இப்படிதான் எழுதுகிறவர் அவரிடம் கொண்டுபோய்க் காட்டும்படி சொன்னான்.

அவள் விரைவாக வந்து சேலை உடுத்துக்கொண்டு கடிதத்துடன் தபால் அதிபரிடம் சென்றாள். கடித்தை வாங்கிப்பார்த்த அவர் நானும் இப்படித்தான் கிறுக்குகின்றனான். என்றாலும் சரியாக இதைப்போல எழுதுகின்றவர் என்றால் வைத்தியர் தான் நீங்கள் அவரிடம் கொண்டு போங்கள் என்றார். சுந்தரியும் சிரமத்தைப்பாராது கணவனது சுகத்தை அறியும் ஆவலுடன் வைத்தியரிடம் ஓடினாள். வைத்தியரும் கடிதத்தை வாங்கிப் பார்த்துவிட்டு நான் இப்படித்தான் எழுதுகிறனான். ஆனால் இந்த எழுத்து மருந்து கொடுப்பவனுக்குத்தான் விளங்கும்

அதனால் அவனிடம் காட்டும்படி கூறினார். சுந்தரி அவசர அவசரமாக மருந்து கொடுப்பவனிடம் ஓடினாள். அவன் அதைப் பார்த்துவிட்டு மேசையில் இருந்த கம்பியில் அக்கடிதத்தை குத்திவிட்டு, மருந்து போத்தலைத்தரும்படி கேட்டான்.

சுந்தரி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு உலகமே சுழலுவதுபோல இருந்தது. அப்படியே சரிந்து வீழுந்தாள். ★

---

## இந்த ஆண்டிற்கான தேசாபிமானி யார்?

### இரண்டாம் சுற்று முடிவுகள்

இரண்டாம் சுற்றில் பெற்ற ஆதரவுச்சீட்டுக்களின்பின்,

i) முதலாம் இடம்: திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
விநாயகர் தருமநிதியம், புலோலிமேற்கு,
பருத்தித்துறை.

ii) இரண்டாம் இடம்: திரு. க. மாணிக்கவாசகர்,
அரச அதிபர் பணிமனை, யாழ்ப்பாணம்.

iii) மூன்றாம் இடம்: திரு. இ. மகேந்திரன்
அதிபர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

இவர்களைத் தெரிவுசெய்து ரூபா 500.00 ஐ பரிசாகப்பெறும்
அதிஷ்டசாலிகள்

i) த. பவாணி, பாவுவீதி, கேணியடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
பரிசுத்தொகை 250.00 ரூபா

ii) ம. விஜயகுமார், யா. இந்துக்கல்லூரி
பரிசுத்தொகை 150.00 ரூபா

iii) த. ஜெயஸ்ரீ, 651/9, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பரிசுத்தொகை 100,00 ரூபா

# வேட்டை

புளுகன், அண்டப்புளுகன், ஆகாசப் புளுகன் என்று மூவர்.

காட்டில் வேட்டையாடச் சென்ற புளுகன் ''யப்பா...... நான் வேட்டைக்குப் போனபோது ஒரு பெரிய சிங்கம் எதிரிலே வந்தது. நான் பயப்படுவேனா.......... என்கிட்ட துப்பாக்கி இருந்தது. ஆனா குண்டு இல்லே...... இருந்தாலும் நான் விடுவேனா......... துப்பாக்கி யால சுட்டுட்டு ஓடிவந்துட்டேன்'' என்று தன் அனுபவத்தைக் கூற அண்டைப்புளுகன் இடைமறித்து,

''அடப்போடா! உனக்காவது சிங்கம்......... எனக்குப் பெரிய யானை! மதம் பிடிச்சுக்கிட்டு ஓடி வந்தது. நான் பயப்படலை....... என்கிட்ட குண்டு இருந்திச்சு..... ஆனா, துப்பாக்கி இல்லே. யோசிச் சுக்கிட்டே இருந்தேன்........ குண்டை அது மேலே வீசி எறிஞ்சேன்... யானை உடம்பைக் குண்டு துளைச்சிடுச்சு! ஓடி வந்துட்டேன்.........' என்று சொல்ல, தொடர்ந்த ஆகாசப்புளுகன்,

''அடபோங்கப்பா..... மனசுல பெரிய ரஜினினு நினைப்பு' நான் போய்க்கிட்டிருந்தப்ப பெரிய புலி வந்திருச்சு. கொஞ்சங் கொஞ் சமா ஸ்டெப்பை ஸ்டெப்பா கிட்டே வந்திச்சு என்கிட்ட துப்பாக்கியும் இல்லே, குண்டும் இல்லே....... ஆனா, துப்பாக்கி லைசென்ஸ் மட்டும் இருந்திச்சு அதை வெச்சுக்கிட்டே புலியை அடிச்சுக் கொன்னுட்டு ஓடியே வந்துட்டேன்.'' என்று கூறினான்!

நன்றி : ஆனந்தவிகடன்

# அறிந்து கொள்ளுங்கள்

- ☐ கைத்துப்பாக்கியை கண்டறிந்தவர் 'கோல்ட்' என்பார்.
- ☐ கூட்டுறவு இயக்கத்தின் தாய்நாடு ஜேர்மனி.
- ☐ இந்திய விடுதலைப் போராட்டவீரன் சுபாஸ் சந்திரபோஸ்.
- ☐ அமெரிக்க இராணுவத் தலைமைக் காரியாலயம் பென்ரகன்.
- ☐ Y.M.H.A. என்ற பதம் உணர்த்துவது இந்து இளைஞர் சங்கம்.
- ☐ புகழ் பெற்ற பாரசீகக் கவிஞர் ஓமர்கயாம்
- ☐ பிரபல ருஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாய்

தொகுப்பு : எல். கிரிதரன்

# ஏமாற்றம் . . .

★ ''மாற்றம்'' என்ற
வடிவெடுத்து
மாற்றிட வந்தாய்
வையகத்தை . . .
ஆனால் உனக்கு
ஏமாற்றம்!
தொடர்ந்திடு நும்பணி
மாற்றிடும்
வையகம்

கு. விஜயகுமார்
யா. இந்துக் கல்லூரி

★ 'மனித வாழ்வின் சகல துறைகளிலும் மாற்றம் வேண்டும் என்பதே' மாற்றத்தின் முழக்கமாய் உள்ளது. ஆனால் பிற்போக்குத் தனமான பழமைவாதக் கருத்துக்களுக்கு இடம்கொடுத்து விடாதீர்கள்.

ஏனெனில் மாற்றம் என்பது புரட்சிகர மற்றும், முற்போக்குச் சிந்தனைகளின் விதைப்பால் விளைவது தாங்கள் அறியாதது. அல்ல.

செ. பொ. சிவனேசு
கோண்டாவில்.

★ குறுக்கெழுத்துப் போட்டி II ன் விடைகளில் 'ஜீவகாருண்யம்' என்பது சரியான விடையாக ஏற்கப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. கழகத் தமிழ் அகராதியின்படி 'ஜீவகாருண்யம்' உள்ளது.

யோ. சுயோதினி
நல்லூர்,

## ஜெயராஜ் பதிலளிக்கிறார்

உங்கள் கேள்விகளுக்கு 'மாற்றம்' ஆண்டு மலரில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் (அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்) அவர்கள் பதிலளிக்கிறார். **வாசகர்களே! உங்கள் கேள்விக் கணைகளை விரைவில் 'மாற்றம்' பணிமனைக்கு அனுப்பி வையுங்கள்.**

ஆ-ர்

மு. கு. 'காருண்யம்' என்பதற்கே பரிசு வழங்கப்பட்டது. விடை பிரசுரத்தில் அச்சுத்தவறாக பொறிக்கப்பட்டுள்ளது.

★ 'மாற்றம்' கண்டு சிந்தை மகிழ்ந்தோம். நேரடி றிப்போட் நன்றாக இருந்தது. தொடர்ந்து மாற்றம் வெளிவர எங்கள் ஆசிகள்.

லோ. கிரி,
திருநெல்வேலி.

★ தமிழ்பனின் 'ஆசிரியரே கேளும்' என்னும் கவிதை மிகச் சிறப்பானதாகும். தற்கால நடைமுறைக்கு பொருத்தமான கவிதை அவருக்கு எனது பாராட்டுக்கள்.

ம. அருள்குமரன்
கொக்குவில்

# நல்லூரில் நாங்கள்

● கவிவண்ணன்

'' சந்திரா என்னோட கொஞ்ச வாரான் இல்லை '' என்றவரே சண்முகம் என்றழைக்கப்படும் வயோதிபர் எம்மருகே வந்தார்.

'' தனது திருமணம் குழப்பப் பட்டதாகவும், தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளதாகவும்தனக்கு பாட்டி ஒருவர் இருநூறு வயதில் இருப்பதாகவும் '' கூறினார்.

'' ஐயா இவ்வளவு நாளும்எங்க இருந்தனீங்க '' எனக் கேட்ட போது,

'' தம்பி எனக்கு மனநோய் அங்கோடையிலே இருந்தனான்.'' என்றவாறே அசாதாரண நடத்தையோ எம்மை விட்டு விலகினார்.

அன்றொருநாள் மாலைப் பொழுது நல்லூர்கோயில் வாசல் புறம் தலைமுழுதும் அங்கொன் றும் இங்கொன்று அடர்ந்த மயிர் களுடனும் வெறும்மேலின் அரை யில் துண்டோடும் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரை சந்தித்து,

'' ஐயா, உங்களை என்ன பெய ரால் அழைப்பது'' என்றோம்.

அவர் 'நெத்தலி' என்றார்.

'' ஐயா நீங்கள் முன்பு என்ன தொழில் பார்த்தீர்கள் '' என்று கேட்டபோது,

'தண்டம்' என்றார்.

'' என்னையா! என்று காதைக் கூர்மைப் படுத்தியபோது,

'' அதுதான் தண்டம் தெரியா தோ! முந்தியெல்லாம் கதிர்காமத் துக்குப்போவம் எத்தனையோ பந் தல் போட்டிருக்கும் ...'' எனத் தொடர்ந்தார்.

நல்லூரின் நான்காம் திருவிழா வன்று தண்ணீர்ப்பந்தலில் அமர்ந் திருந்த சேகர் என்ற இளம்பொடி யன் ஒருவனைப் பார்த்து ''இவன் தாண்ட என்ரை அப்பா'' என்று சிறுவன் ஒருவன் ஓடிவந்தான். அவனும் உளநோயினால் பாதிப் படைந்திருந்தாய் அறியமுடிந்தது.

இன்னொரு நாள் இரு சிறு வர்கள் எங்க ளுடைய செ ருப்புக்களைப் பார்த்து ''இதாண்ட என்ரை செருப்பு'' ''இதாண்டா என்ரை செருப்பு'' எனக் கத்தினார்கள்.

'' டேய், இங்க வாங்கடா'' எனக் கூப்பிட்டோம். அவர்கள் ஓடி மறைந்தார்கள்.

இன்னொரு சிறுவன் நல்லைக் கந்தன் வீதி உலாவரும் போது, காற்சட்டையும் அரையில் கட்டிய சேட்டுமாக ''அண்ணை இரண்டு ரூபாய் தாங்க!'' என்று கேட்ட வாறு ஓடிவந்தான். '' நல்லாப்ய்

'நேத்து எங்க வீட்டுக்காரர் தன் சட்டை கழுத்தைப் பிடிக்கு துன்னு கத்தினார் ......'

'அப்புறம் என்ன செய்தே?'

'அப்புறம் தான் கண்டு பிடிச்சேன் பொத்தான் ஓட்டைக்குள்ளே தலையை விட்டுட்டு கத்தி கிட்டு இருந்தாரு!'

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

படிச்ச பொடியன் இதுவும் இறைவன்ரை திருவிளையாடல் தானே' அருகில் நின்றவர் சொன்னார்.

''வில்லுத்தகடு'' ''வில்லுத்தகடு'' என நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க உயரமானவரை சிறுவர்கள் கிண்டல் செய்தார்கள். அம்மனிதர் தண்ணீர் பந்தல், கப்புகளையும் அதில் கட்டிருந்த 'ரியுப் லைற்' களையும் ஏற இறங்க பார்த்தலைத காண முடிந்தது.

விட்டால் வானத்தைக்கூடவேலி போட்டு உரிமை கொண்டாடக் கூடிய தமிழன் ''அடித்துவிட இரண்டு ரூபா: காற்றடிக்க ஒரு ரூபா'' என புதிய கண்ணாடிப் பிறேம் போட்டிந்த போட் தாங்கும் சைக்கிள் கடை அருகில்' இரவல் தந்தவன் கேட்கின்றான் இல்லை என்றால் விடுவானா' என்று பாடியவாறு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் காணப்பட்டார்கள்.

மனநோயாளார் வைத்திய சாலையை விட இக்கால சூழ் நிலையில் வீதிகளில் பலர் வைத்திய வசதிகள் அளிக்கப்படாமல் அலைகிறார்கள். ★

# பேனா நண்பர்கள்

இ. ஜெயக்குமார்,
தெணியம்மன்வீதி,
புலோலி மேற்கு. பருத்தித்துறை.
வயது: 15

த. தவரூபன்,
103/6, கோயில்வீதி, நல்லூர்.
வயது: 14

ச. சங்கரன்
373/3. நாவலர் வீதி, நல்லூர்.
வயது: 23

பே. குமரதேவன்
26/14, தவராஜா வீதி,
திருநெல்வேலி.
வயது: 14

ந.கண்ணன்,
ராஜிவீதி, உடுப்பிட்டி.
வயது: 19

---

'எத்தினி கொழுப்பு இருந்தா வீட்டுக்குள்ளே வந்து பிச்சைகேட்பாயா'

கோவிச்சிக்காதீங்க தாயே! வெங்காயம், முருங்கைக்கா சாம்பர் வாசம் என்ன இங்கே இழுத்துக்கிட்டு வந்திடிச்சு.

## வேலணையூர் சுரேஸ்



இவர் இயற்கை எழிலும் அமைதியுமுடைய வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன் சுரேஷ்.

சுரேஷ் தனது ஆரம்பக்கல்வியை வேலணையிலும், பின் இவரின் மாமனாரின் முயற்சியால் மன்னாரிலும் தொடர்ந்தார். சுரேஷ் மேல்படிப்புக்கென யாழ். வந்து யா/ இந்துக் கல்லூரியில் சேர்ந்து கற்கலானார்.

கொடி ஒன்று படரக் கொழு கொம்பு அவசியம். இந்த வேலணையூர் சுரேஷ் என்ற கொடி படர பொன்னையா மாணிக்கவாசகரே கொழும்பாகத் திகழ்ந்தார்.

கவிஞர் பொ. மாணிக்கவாசகரின் அயராத முயற்சியும் ஊக்கமும், அகப்புற சூழ்நிலைகளும் சுரேஷை கவிஞர் வேலணையூர் சுரேஷ் என்ற நிலைக்கு உயர்த்தியதோடு 'களத்தீ' என்ற கவிதைத் தொகுதியை வெளியிடக்கூடிய ஆற்றலையும் வழங்கியது.

இவர் கவிதைகளை மட்டுமன்றி இசைப்பாடல்கள், பஜனைகள், கும்மி நடனம், கோலாட்டம், இசைச்சித்திரம், கவியரங்கம் என பல துறைகளில் தனது கைத்திறனைக் காட்டுகின்றார். இதை இன்றைய பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி என்பவற்றினூடாக காணமுடிகிறது.

---


## கவிதைத் தொகுதி

"இருபத்தைந்து இளங்கவிஞர்களின் கவிதைகள்"

என்ற கவிதைத் தொகுதியை நாம் வெளியிட உள்ளதால் உங்களுடைய பெயர், விபரங்களுடன் தரமான இரு கவிதைகளை 'மாற்றம்' பணிமனைக்கு அனுப்பி வையுங்கள்.

அட்டைப் படக் கவிதைப் போட்டி : 03

# தமிழன் கல்வி



இக்கட்டான காலத்தில் எக்கட்டான கஷ்டத்திலும்
தொடருவது தமிழன் கல்வி
காற்றையும் வென்று தேங்காய் எண்ணெய்யைக் குடித்து
கண் சிமிட்டும் போத்தல் விளக்கில்
கவலைகளை மறந்து கண்கள் இமையாது
கற்றிடும் தமிழன் கல்வி
நாளை திட்டங்கள் தீட்டி எதிரியை எதிர்த்து
வெற்றி பெற்றிடும் என்பது உறுதி!

பரிசு பெறுபவர்!

செல்வி இ. பிரியதர்சினி
(யா. வேம்படி மகளிர் கல்லூரி)
91 (149), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சுருட்டியின் பதில்கள்

○ கணவன் மனைவியிடம் எதை கேட்டக்கலாம்? எதைக் கேட்டுக் கூடாது?

தி. பார்த்திபன், நாவற்குழி.

தட்டிக் கேட்கலாம் அதட்டிக் கேட்கக்கூடாது.

○ சீதனம் கேட்கும் ஆண்களைப் பற்றி......

ப. ரதி, அச்சுவேலி.

வேதனம் இல்லா வெருளிகள்.

○ சுருட்டியாரே! உங்களை நேரில் காணமுடியாதா?

றூபன், தெல்லிப்பழை.

இது என்ன பூதக்கண்ணாடி வைத்து பார்க்கும் உருவமா?

○ மணலாறு இதயமென்றால் அதன் 'இதயம்' எங்கே?

வே. முரளி, அரியாலை.

அணலாறு பாயும் அந்த அருவிகளிடம்.

○ நிம்மதியாகத் தூங்க என்ன வழி?

க. குமரன், நல்லூர்.

குறட்டை விடாதவர்களுக்குப் பக்கத்தில் படுத்துக் கொள்ளுங்கள்.

○ வேலி பாய்பவர்களை தடுக்க வழி உண்டா?

சு. தர்ஷன், நல்லூர்.

கற்[பு] தூண்கள் போடவேண்டும்.

○ சுருட்டியாரே! உமக்கு சதி வேலை செய்கிறதா? விதி வேலை செய்கிறதா?

தே. மயூரன், ஆனைக்கோட்டை.

மதி வேலை செய்கிறது

○ விற்றமின் குறைபாட்டை போக்க சிறந்த ரொனிக்?

ப. வதனி, வல்வெட்டித்துறை.

'சுப்பர் ெ[ச]ானிக்'

○ பிச்சை எடுப்பவர்களை ஒழிக்க வழி ....

மா. ராஜன், கோண்டாவில்.

பிச்சையிடுவதை நிறுத்துவது.

○ இப்போ! சோம்பறிகளும் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி உழைக்கிறார்களாமே?

ச. சுரேஷ், உரும்பிராய்.

திருடப்போன இடத்திலா?

---

மனநோய் மருத்துவ மனையினுள் நுழைந்தவுடனே ஒருவன் கட்டிலுக்கடியில் படுத்துக் கொண்டான். அவன் 'கார் மெக்கானிக்'

# தமிழ்த்தாய் மன்றம் அறிமுகப்படுத்தும்

இந்த ஆண்டுக்கான

## தேசாபிமானியார்?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பொதுநலனையே கருத்திற் கொண்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதன் யார்? அவர் ஆற்றும் பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறும் சுற்றுகளில் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக்களைப் பெறுபவர் '1993-ம் ஆண்டுக்கான தேசாபிமானி' யாகக் கௌரவிக்கப்படுவார்.

**போட்டி விதிகள் :**

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டுக்குமாக மூன்று சுற்றுக்கள் நடைபெறும். இது இறுதிச்சுற்றாகும்.
2. 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்களை நிரப்பி அனுப்ப வேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படும். பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப் படுவார்கள்.
4. படிவங்களை 10-10-1993 க்கு முன் மாற்றம் பணிமனை, புதிய செங்குந்த வீதி. திருநெல்வேலி. என்ற புதிய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. மூன்றாவது சுற்று முடிவுகளும் இறுதி முடிவும் அடுத்த மாற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்தவிதமான கடிதத் தொடர்பு களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

---

போட்டி இல. 03 **ஆதரவுச் சீட்டு - 03**

உங்கள் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தேசாபிமானியின் 'பெயர் : ..........................................

முகவரி : ..........................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர்? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்.

# அகில இலங்கை கம்பன் கழகம்

தமிழ்ப் பணி புரியத் தலையெடுப்பவர்களுக்கெல்லாம் பலமான அடி' என்ற நிலை மாறும் காலம் வந்துவிட்டது.

அகில இலங்கைக் கம்பன் 'கழகம் கம்பராமாயணத்தை. அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வளர்ச்சியையும் தமிழர் பண்பாட்டையும் பேணுவோம். இளந்தலைமுறையை ஆளுமையுடன் அறவழிப்படுத்துவோம்.' என கங்கணம்கட்டி நிற்பதுவும்; அவர்களுடைய வளர்ச்சியும் தமிழ்ப்பணி செய்பவர்களுக்கு தடையாக உள்ளவர்களை மூக்கில் விரல் வைக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த திரு. தி. நந்தகுமார் (தலைவர்) திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர்) திரு. க. குமாரதாஷன் (செயலாளர்) திரு. ஞ. ஸ்ரீரத்தினகுமார் (பொருளாளர்) ஆகியோரின் முயற்சியால் அகில இலங்கைக் கம்பன் கழகம் 1979 இல் உருவாக்கப்பட்டது. அந்த வேளையில் இந்தச் சமூகம் அவர்களை பொருட்டாகக் கருதவில்லை. ஆனால், அவர்களின் அயராத உழைப்பும், தளராத ஊக்கமுமே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும்.

இன்று கம்பன் கழகம் பல்வேறு இடங்களில் கிளைகளைப் பரப்பி ஆலய உற்சவங்களிலேயும், இலக்கிய விழாக்களிலேயும் இலக்கியம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டும் வருகிறது.


மேலும், இவர்கள் ஆண்டுதோறும் 'கம்பன் விழா' நடாத்தி கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்த்தும், மக்கள் முன்னேற்றத்துக்காக பணி புரிபவரை 'மகரயாழ்' விருது வழங்கிக் கௌரவித்தும் தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை நடாத்தியும் இயல், இசை, நாடகத்துறையில் முதிர்ந்தவர்களைத் கௌரவித்தும் இளம் கலைஞர்களை அத்துறைகளில் அறிமுகம் செய்தும், பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தியும், நூல்களை வெளியீடு செய்தும் மக்கள் பணி புரிகிறார்கள்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் நல்லூர் தேவஸ்தானத்தால் வழங்கப்பட்ட இடத்தில் 'கம்பன் கோட்டம்' ஒன்றையும் அழகுறக்கட்டி முடித்திருக்கிறார்கள்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் காரைக்குடி கம்பன் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட நாற்பத்தொன்பது கம்பன் கழகங்களில் ஒன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 'வளர்க ..... பணி......'

— மதுமதன்

# குறுக்கெழுத்துப் போட்டி : 04



இடமிருந்து வலம் →

1. மாதவியின் மகள்
4. ஒரு வகை அடுப்பு
5. கடவுளில்லை என்போன் இறுதி இரண்டு ஒழிந்தது
8. இன்பம் இதில் முடியும்
9. மானைப் போன்ற மிருகம்

மேலிருந்து கீழ் ↓

1. பாம்பு இதில் மயங்குவதில்லை
2. இராவணன் மகன்
3. கழுதையை இவ்வாறும் அழைப்பர்.
6. போராளிகள் கொள்கையில் இதுவாக உள்ளனர்.
7. கண்ணகி இதை எரித்தாள்

போட்டியில் யாரும் பங்கு கொள்ளலாம். இக் கூப்பனை நிரப்பி உங்கள் பெயர் விபரங்களுடன் ''மாற்றம் பணிமனை'' புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 10-10-1993 க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். பரிசுத் தொகை ரூபா : 99.00

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்: 03

→ (1) செம்படவன் (4) லைத (6) தற்குறி (8) பஞ்ச (9) மையல் (11) திரவியம்.

↓ (1) செந்தன்மை (2) படகு (3) வலை (5) தரிசனம் (7) றிப (10) யதி.

பரிசு பெறுபவர் :

சகிலா கிரிசாந்தி கொன்சாக்

யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

---

இச் சஞ்சிகை தமிழ்த்தாய் மன்றத்துக்காக புதிய செங்குந்த வீதியில் உள்ள வே. நவமோகன் என்பவரால், நல்லூர், ஆடியபாதம் வீதியில் உள்ள முல்லை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ப. ஸ்கந்தரூபன் 12

'மாற்றம்'

மக்கள் சஞ்சிகைக்கு

எமது ஆசிகள்

# லிங்கம் கிறீம் ஹவுஸ்

52, மணிக்கூட்டுகோபுர வீதி, — யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது !

# விஞ்ஞான விளக்கம்

ஆண்டு 10 (புதிய பதிப்பு)

ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகளுக்கு
விஞ்ஞான வினா விடை நூல்களும் உண்டு.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

எத்திசையும் தித்திக்கும் தேன் சிந்தும்

# ஐஸ்கிறீம் வகைகள்

தயாரிப்பதில் முன்னோடிகள்

RATNAM INDUSTRIAL ORGANIZATION

ரியோ

R I O

# றியோ கிறீம் ஹவுஸ்

75, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.